# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2018

பதினொன்றாம் வகுப்பு பதிவு எண் | | | | | | |

நேரம்: 2.30 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பிரிவு - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **20×1=20**

1) பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை
அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்
இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உத்தி

2) பொருந்தா ஒன்றினை கண்டறிக.
அ) நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை
ஆ) பொருளாதாரக் கோட்பாடுகள்
இ) பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும் ஈ) மற்றவை மாறாதிருக்கும் போது

3) அடிப்படை பொருளியல் பிரச்சனை அல்லாதது
அ) என்ன உற்பத்தி செய்வது ஆ) எவ்வாறு உற்பத்தி செய்வது
இ) யாருக்காக உற்பத்தி செய்வது ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம்

4) இயல்பெண் பயன்பாடு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்
அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி.ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்

5) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது
அ) தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண் ஆய்வு
இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு

6) கீழ்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?
அ) வரி அதிகரிப்பதால் ஆ) அதிக மானியம் வழங்குவதால்
இ) வட்டிவீதம் அதிகரிப்பதால் ஈ) விலை அதிகரிப்பதால்

7) கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
அ) குறை அளிப்பு ஆ) இயங்கும் தன்மையுடையது
இ) பலவகைப்படும் ஈ) இயற்கையின் கொடை

8) சராசரி உற்பத்தி குறையும் போது இறுதிநிலை உற்பத்தி
அ) சராசரி உற்பத்தியைவிட அதிகமாக இருக்கும்
ஆ) சராசரி உற்பத்தியைவிட குறைவாக இருக்கும்
இ) அதிகரிக்கும் ஈ) அ மற்றும் இ

9) நிறுவனத்திற்கு சொந்தமான உற்பத்தி வளங்களுக்கு வழங்கப்படும் ஊதியம்
அ) பணச்செலவு ஆ) உள்ளார்ந்த செலவு இ) வாய்ப்புச் செலவு ஈ) உண்மைச் செலவு

10) சராசரி மாறாச் செலவுக்கான வாய்ப்பாடு
அ) TC/Q ஆ) TVC/Q இ) TFC/Q ஈ) TAC/Q

11) ஒரு புத்தகம் '9 வீதம் 27 புத்தகங்களை விற்கிறார் எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்?
அ) '297 ஆ) '296 இ) '243 ஈ) '117

12) கீழ்கண்டவற்றுள் எது முற்றுரிமை போட்டியின் இயல்புகள்?
அ) ஒரு விற்பனையாளர் ஆ) சில விற்பனையாளர்கள்
இ) பண்ட வேறுபாடு ஈ) உள்ளே நுழைய முடியாது

13) ஒவ்வொரு உற்பத்தியாளரின் உற்பத்தியும் முழு நெகிழ்ச்சியுடைய தேவையை கொண்டிருக்கும் நிலையையே நிறைவு போட்டி எனக் கூறியவர்
அ) ஜோன் ராபின்சன் ஆ) ஆடம் ஸ்மித் இ) ஆல்பிரட் மார்ஷல் ஈ) பிலிப் கோட்லர்

14) விற்பனை செலவிற்கு உதாரணம்
அ) கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
இ) விளம்பர செலவு ஈ) கொள்முதல் செலவு

15) பகிர்வு கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக்கோட்பாடு ஆ) காரணி விலைக்கோட்பாடு
இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக் கோட்பாடு

16) கடன்நிதிக் கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும்.
அ) S+BC+DH+DI ஆ) I+DS+DH+BC இ) S+DS+BC+DI ஈ) S+BC+DH+DS
17) எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.
அ) பரிமாற்ற நோக்கம் ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்
இ) ஊக நோக்கம் ஈ) தனிப்பட்ட நோக்கம்
18) கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப் பகுதி
அ) கோலார் ஆ) இராமகிரி இ) அனந்தபூர் ஈ) கொச்சின்
19) இந்தக் கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது.
அ) சமதர்ம சிந்தனை ஆ) ஒழுக்கநெறி அடிப்படை
இ) கோபால கிருஷ்ண கோகலே ஈ) தாதாபாய் நௌரோஜி
20) பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியாசென் பெற்ற ஆண்டு
அ) 1998 ஆ) 2000 இ) 2008 ஈ) 2010

## பிரிவு - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**அவற்றில் வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) பண்டங்களை பணியிலிருந்து வேறுபடுத்துக.
22) பயன்பாட்டை வரையறு.
23) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியினை விளக்கும் அட்டவணையை எழுதுக.
24) உற்பத்தியாளர் சமநிலை அடைய நிபந்தனை யாது?
25) மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?
26) வருவாயின் வகைகளை எழுதுக.
27) தூய போட்டியின் இன்றியமையாத பண்புகளைக் குறிப்பிடுக.
28) நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?
29) போலிவாரம் - வரையறு.
30) இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் இரண்டு இயல்பினைக் கூறுக.

## பிரிவு - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**அவற்றில் வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?
32) நுண்பொருளியலின் முக்கியத்துவத்தில் ஏதேனும் மூன்றை எழுதுக.
33) சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை?
34) அளிப்பு நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுக.
35) காப்-டக்ளஸ் உற்பத்தி சார்பை விளக்குக.
36) வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுடன் வரையறு.
37) விலைபேதம் காட்டுதலின் நிலைகளை விளக்குக.
38) காலத்தின் அடிப்படையில் அங்காடியின் வகைகளை பட்டியலிடுக.
39) பணத்தேவைக்கான நோக்கங்கள் யாவை?
40) இந்தியத் திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறையை எழுதுக.

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35**

41) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. **(அல்லது)**
உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்களை விவரி.
42) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை? **(அல்லது)**
சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை எழுதுக.
43) விகிதஅளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக. **(அல்லது)**
சிக்கனமின்மைகளை விவரி.
44) குறுகிய கால செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி. **(அல்லது)**
பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
45) நிறைவு போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது? **(அல்லது)**
சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
46) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. **(அல்லது)**
இலாபக் கோட்பாடுகளை விளக்குக.
47) இந்திய கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி. **(அல்லது)**
இந்திய பொருளாதாரத்தின் பலவீனங்களை விளக்குக.

***----***